செய்தி வெளியீடு எண்: 706 நாள் : 30.12.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் 29.12.2015 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. மக்களவை துணைத் தலைவர் டாக்டர் எம். தம்பிதுரை அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டாக்டர் பி. வேணுகோபால் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாநிலங்களவைத் குழுத் தலைவர் திரு.ஏ. நவநீதகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களின் ஒரு மாத சம்பளத் தொகையான 24 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.ப. தனபால் அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சரும், அவை முன்னவருமான திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், அரசு தலைமைக் கொறடா திரு.ஆர். மனோகரன் அவர்கள் ஆகியோர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவை துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா ஆகியோரின் ஒரு மாத சம்பளத் தொகையான 75 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய்.

3. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (Tata Consultancy Services) நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.என். சந்திரசேகரன் அவர்கள் 10 கோடி ரூபாய்.

4. அப்பல்லோ மருத்துவமனைகளின் செயல் துணைத் தலைவர் டாக்டர் ப்ரீதா ரெட்டி அவர்கள் 3 கோடி ரூபாய்.

5. சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட் (Sundram Fasteners Limited) நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.சுரேஷ் கிருஷ்ணா அவர்கள் 3 கோடி ரூபாய்.

6. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் திரு.பி. அசோக், Chennai Petroleum Corporation Limited (CPCL) நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. கௌதம் ராய், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு. யு.வி. மன்னூர், CPCL நிறுவனத்தின் இயக்குநர் (நிதி) திரு.எஸ். கிருஷ்ண பிரசாத் ஆகியோர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் 3 கோடி ரூபாய், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவன பணியாளர்களின் ஒரு நாள் சம்பளத் தொகையான 44 லட்சத்து 32 ஆயிரத்து 486 ரூபாய், CPCL நிறுவனத்தின் சார்பில் 1 கோடி ரூபாய், CPCL நிறுவன பணியாளர்களின் ஒரு நாள் சம்பளத் தொகையான 32 லட்சத்து 72 ஆயிரத்து 560 ரூபாய், என மொத்தம் 4 கோடியே 77 லட்சத்து 5 ஆயிரத்து 46 ரூபாய்.

7. தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஜி. ஸ்ரீநிவாசன் அவர்கள் 3 கோடி ரூபாய்.

8. மாலை முரசு நாளிதழின் இயக்குநர் திரு. இரா.கண்ணன் ஆதித்தன் அவர்கள் 1 கோடி ரூபாய்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக மொத்தம் 25 கோடியே 76 லட்சத்து 91 ஆயிரத்து 46 ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 29.12.2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 195 கோடியே 43 லட்சத்து 61 ஆயிரத்து 563 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 30.12.2015